மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, டாக்டர் ஜெ. பரந்தாமன், திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

444—

பச்சகுப்பம் இரயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்டுதல்.

* 5343 டாக்டர் ஜெ. பரந்தாமன் :

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாதனூர் ஒன்றியம், பேரணாம்பட்டு தொகுதி, பச்ச குப்பம் இரயில்வே கேட் அருகில் சாலையில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும் ;

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பச்சகுப்பம் ரயில்வே கேட் அருகில் மேம்பாலம் கட்டு வதற்கு தேவையான இடத்தை கையகப்படுத்துவதற்காக இன்றைக்குப் பணிகள் நடைப்பெற்அக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலம் கையகப்படுத்த பட்ட பின்பு அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ''ஆம்,, என்று பதில் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொளகிறேன், வெற்றிப் பயணத்தை யாராலும் நிறுத்த முடியாத மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்பூர் பச்சகுப்பம் கேட்டினால் நின்று செல்ல வேண்டி வந்ததால் பேரணாம்பட்டு தொகுதி மக்கள் கோபம் கொண்டு இந்த கேட்டை கண்டிக்க, தண்டிக்க மேம்பாலம் கட்ட விரும்புகிறார்கள். போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு நேரம், எரிபொருள் இரண்டையும் சேமிக்க முடியும் என்பதால் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற முடியுமா என்றும், திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவர் கேட்டிருக்கின்ற இந்த மேம்பாலம் கட்டுகின்ற பணி 1991-92 ஆம் ஆண்டு பட்டியலில் சேர்க்கப்பட்டு இன்றைக்கு மாவட்ட வருவாய் நிர்வாகம் மூலம் 4 (1) செக்ஷன்படி நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். ஆகவே, நிலத்தை கையகப்படுத்தியதற்குப் பின்னால் அந்தப் பணியை விரைவாக தொடங்குவதற்கு இந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி-சென்னை நெடுஞ்சாலையில் இதுபோன்று 3 இடங்களில் இந்த ரயில்வே லைன் இருப்பதால்—அந்தப் பகுதியிலிருந்து வருகின்ற நான் மற்றும் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சென்னைக்கு வரும்போதும், சென்னை யிலிருந்து திரும்பிப் போகும்போதும் நேரம் அதிகமாக ஆகிற காரணத்தால்—அந்தப் பகுதிகளில் எல்லாம் மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற நேரத்தில் 50 சத வீதம் ரயில்வே நிர்வாகம் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு முன்னுரிமைப் பட்டியலும் அவர்கள் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பட்ட பட்டியலில் இடம் பெற்ற இடங்களை தேர்வு செய்வதற்கு ரயில்வே நிர்வாகம் இன்றைக்கு வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு மேம்பாலங்களுக்குத்தான் அனுமதி அளித்துக் கொண் டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரயில்வே நிர்வாகத்திற்கு மத்திய அரசின் மூலம் சொல்லி அதிகமான நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்து தருவார்களானால் இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

445—

தனியார் ஆக்கிரமிப்பை அகற்றி, புல் வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை

*2585 திரு. க. அர்ச்சுனன் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

53–57—4